பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21
விரிவுரையாளர் வாழ்க்கைக் குறிப்பு 32
ஆறு அடிப்படைகள் 37
ஆறு அடிப்படைகள் 42
ஆறு அடிப்படைகள் 49
அறிமுகம் 51
முதல் அடிப்படை 55
இரண்டாவது அடிப்படை 64
மூன்றாம் அடிப்படை 77
நான்காம் அடிப்படை 81
ஐந்தாம் அடிப்படை 89
ஆறாவது அடிப்படை 96

ஆறு அடிப்படைகள்

✿

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...யாவற்றையும் மிகைத்தவனான, அரசாள்பவனான அல்லாஹ்வின் வல்லமையை அறிவிக்கின்ற ஆறு அடிப்படைகள் மிகப் பெரும் வியப்பிற்குரிய அத்தாட்சிகளாக உள்ளன. இஸ்லாமைப் பற்றித் தவறான எண்ணம் கொண்டுள்ளவர்களின் எண்ணத்திற்கும், குறிப்பாகப் பொதுமக்களுக்கும் தெளிவாக விளங்குகிற வகையில் அந்த ஆறு அடிப்படைகளையும் அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான். இதற்குப் பிறகும் சொற்ப நபர்களைத் தவிர உலகின் அறிவாளிகள் பலர் இது விசயத்தில் தவறிழைத்துள்ளார்கள்.

முதல் அடிப்படை

அல்லாஹ் ஒருவனுக்காக மட்டும், அவனுக்கு எதையும் இணை வைக்காமல் தூய எண்ணத்தோடு வணக்கம் புரிவது. ஏகத்துவத்திற்கு எதிராக அல்லாஹ்வுக்கு இணைவைப்பது பற்றிய விளக்கத்தை அறிவது.

குர்ஆனின் பெரும்பான்மையான இடங்களில் பாமரர்களும் விளங்கிக்கொள்கிற விதத்தில் இந்த அடிப்படையைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க நல்லோர்களைக் குறைகூறக் கூடாது; அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் குறை வைத்துவிடக் கூடாது என்பதாகப் பெரும்பான்மையான மக்களுக்கு ஷைத்தான் அலங்காரமாக்கிக் காண்பிக்கிறான். நல்லோர்களையும் அவர்களைப் பின்பற்றுவோரையும் நேசிப்பது என்ற போர்வையில் அல்லாஹ்வுக்கு இணைவைப்பதை ஷைத்தான் அலங்கரித்துக் காண்பித்துள்ளான்.

இரண்டாவது அடிப்படை

மார்க்க விசயத்தில் ஒன்றுசேர்ந்திருக்கும்படி அல்லாஹ் உத்தரவிட்டுள்ளான். அது விசயத்தில் பிரிந்துவிடுவதை அல்லாஹ்

முதல் அடிப்படை



إِخْلَاصُ الدِّينِ للهِ تَعَالَى وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ

அல்லாஹ் ஒருவனுக்காக மட்டும், அவனுக்கு எதையும் இணைவைக்காமல் தூய எண்ணத்தோடு வணக்கம் புரிதல்.

நாம் பேசவுள்ள ஆறு அடிப்படைகளில் முதல் அடிப்படை, அல்லாஹ் ஒருவனுக்காக மட்டும் அவனுக்கு எதையும் இணைவைக்காது தூய எண்ணத்தோடு வணக்கம் புரிவது பற்றியதாகும்.

- இதுதான் முக்கியமான அடிப்படையும் மார்க்கத்தின் அஸ்திவாரமுமாகும்.
- இதுவே நபிமார்களுக்கும் அவர்களது சமுதாயத்தினருக்கும் இடையே போர்கள் நடந்ததற்குக் காரணமாகும்.
- அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்திருப்பதிற்கும் அவர்களின் நற்பாக்கியத்திற்கும் காரணமாக உள்ள இந்த அடிப்படையையே நபிமார்கள் சரிசெய்ய நாடினார்கள்.

ஆகவே, மனிதன் நோன்பு நோற்று, தொழுது, அதிகமாக வணக்க வழிபாடுகள் புரிய வேண்டும் என்பது மட்டும் நோக்கமல்ல. முக்கியமான நோக்கம் அவற்றை அல்லாஹ்வுக்காக மனத்தூய்மையோடு செய்வதுதான். அல்லாஹ்வுக்காக மட்டும் மனத்தூய்மையோடு குறைந்த அளவில் வணக்க வழிபாடு புரிவது, அந்த மனத்தூய்மை இல்லாமல் அதிகமாக வணக்க வழிபாடு புரிவதை விடச் சிறந்தது. ஆகவே, ஒருவர் இரவு, பகலாகத் தொழுகிறார். செல்வத்தைத் தர்மம் புரிகிறார். நிறைய நற்காரியங்கள் புரிகிறார். ஆயினும் இவை அனைத்தையும் இக்லாஸ் என்னும் மனத்தூய்மை இன்றி அவர் செய்தால் அதனால் எந்தப் பலனும் இல்லை. ஆகவே, அல்லாஹ்வுக்காக மட்டும் இக்லாஸாக நற்காரியங்கள் புரிவது அவசியமாகும்.

மூன்றாம் அடிப்படை

أَنَّ مِنْ تَمَامِ الِاجْتِمَاعِ السَّمْعَ وَالطَّاعَةَ لِمَنْ تَأَمَّرَ عَلَيْنَا وَلَوْ كَانَ عَبْدًا حَبَشِيًّا،

முஸ்லிம்கள் ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபடுகிற அல்-ஜமாஅத் என்பது முழுமையாக அமைவதின் ஓர் அங்கம், நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஓர் அடிமை நமக்கு தலைவராக இருப்பினும் அவருடைய சொல்கேட்டு, அவருக்கு நாம் கட்டுப்படுவதாகும்.

மூன்றாவது அடிப்படை இஸ்லாமிய ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்படுவது. ஆட்சித்தலைவருக்குக் கட்டுப்பட்டால்தான் அல்-ஜமாஅத் எனும் முஸ்லிம்களின் கூட்டமைப்பு பரிபூரணமாக அமைய முடியும். ஆகவே, தலைவர் (அமீர்) இல்லாமல் அல்-ஜமாஅத் இல்லை. (ஜமாஅத் என்றால் எந்தக் கூட்டத்தையும் குறிக்கும். ஆனால், அல்-ஜமாஅத் என்பது நபியவர்கள் முஸ்லிம்களை ஒன்றுபடுத்திய ஒரே பாதையையும், ஆட்சியதிகாரம் கொண்ட தலைவரின் கீழ் ஒன்றுபட்ட முஸ்லிம்களையும் குறிக்கும்.)

தலைவருடைய பேச்சை மக்கள் செவியுறாது, கட்டுப்படாது தலைமைத்துவம் என்பது இல்லை. ஆகவே, குற்றத்திற்கான தண்டனையை நிறைவேற்றவும், நன்மையை ஏவி தீமையைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவருக்கு உதவி செய்யவும், அமைதியைக் காக்கவும் இஸ்லாமிய ஆட்சித்தலைவரை அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அருளாக ஆக்கியுள்ளான். இது அல்லாஹ்வின் அருளாகும்.

நபி ﷺ அவர்கள் இறந்துவிட்டபோது குழப்பமும் கருத்துவேறுபாடும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று பயந்து நபித்தோழர்கள் நபியவர்களை அடக்கம் செய்யும் முன்பே அடுத்த ஆட்சித் தலைவருக்கு பைஅத் (உறுதிப்பிரமாணம்) செய்தார்கள். ஏனெனில், ஆட்சித்தலைவர் இல்லாமல் ஒரே ஓர் இரவுகூட அவர்களால் (நிம்மதியாக) வாழ முடியாது என்று அறிந்திருந்தார்கள். ஆம், ஆட்சித்தலைவரை நியமிப்பது மார்க்கத்தின் அவசியத் தேவைகளில்

ஐந்தாம் அடிப்படை

✿

بَيَانُ اللهِ سُبْحَانَهُ لِأَوْلِيَاءِ اللهِ وَتَفْرِيقُهُ بَيْنَهُمْ وَبَيْنَ الْمُتَشَبِّهِينَ بِهِمْ مِنْ أَعْدَاءِ اللهِ الْمُنَافِقِينَ وَالْفُجَّارِ،

இறைநேசர்களைப் பற்றி அல்லாஹ் கூறுவதைப் புரிந்து கொள்ளுதல். உண்மையான இறைநேசர்களையும் அல்லாஹ்வின் விரோதிகளான நயவஞ்சகர்கள், பெரும்பாவிகள் ஆகியோரை இறைநேசர்கள் என்று கூறப்படுவதையும் தனித்தனியாகப் பிரித்துப் புரிந்துகொள்ளுதல்.

இதுவும் ஆறு அடிப்படைகளில் ஒரு பெரும் அடிப்படையாகும். இதன் மூலம் அல்லாஹ்வின் நேசர்களையும் ஷைத்தானின் நேசர்களையும் தனித்தனியாக இனங்காட்டப்படுகிறது. ஏனெனில், அசத்தியவாதிகள் ஷைத்தானின் நேசர்களை இறைநேசர்கள் என்பதாகப் பெயரிட்டு அழைக்கிறார்கள். ஆகவே, இந்த விசயம் மக்களுக்குக் குழப்பமாக ஆகிவிட்டது. ஆகவேதான் ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா[7] ﵀ அவர்கள் 'அல்-ஃபுர்கான் பைன

7 இப்னு தைமிய்யா: இயற்பெயர், அபுல் அப்பாஸ் தகீய்யுத்தீன் அஹ்மது இப்னு அப்துல் ஹலீம். துருக்கியின் ஹர்ரான் நகரில் ஹிஜ்ரீ 661 (கி.பி. 1263)இல் பிறப்பு. அவர்களின் தந்தை, பாட்டனார், மாமா அனைவரும் அன்றைய ஹன்பலி மத்ஹபின் பிரபல அறிஞர்கள். ஏழு வயதில் அவர்களின் குடும்பம் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸிற்குக் குடிபெயர்ந்தது. இமாமவர்கள் இருநூறுக்கும் மேற்பட்ட அறிஞர்களிடம் கல்வி பயின்றார்கள். அவர்களின் ஆசிரியர்களில் ஒருவரும் சிரியாவின் உயர்நீதிபதியுமான காழீ ஷம்சுத்தீன் அல்மக்திஸி ﵀ அவர்கள். இமாமவர்களின் கல்வி ஆழத்தைப் பார்த்துபதினேழாம் வயதிலேயே அவர்கள் ஃபத்வா தருவதற்கான அதிகாரத்தை வழங்கினார்கள். இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் தம் ஆயுள் முழுவதையும் அல்லாஹ்வின் மார்க்கப் பணிகளுக்கு அர்ப்பணித்து, நூற்றுக்கணக்கான நூல்களையும்

ஆறாவது அடிப்படை

✿

رَدُّ الشُّبْهَةِ الَّتِي وَضَعَهَا الشَّيْطَانُ فِي تَرْكِ الْقُرْآنِ وَالسُّنَّةِ وَاتِّبَاعِ الآرَاءِ وَالأَهْوَاءِ الْمُتَفَرِّقَةِ الْمُخْتَلِفَةِ، وَهِيَ أَنَّ الْقُرْآنَ وَالسُّنَّةَ لَا يَعْرِفُهُمَا إِلَّا الْمُجْتَهِدُ الْمُطْلَقُ،

குர்ஆனையும் நபிவழியையும் விட்டுவிடத் தூண்டுவதின் மூலம் பலவாறு பிரிவினைகளில் தள்ளுகிற மனஇச்சைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும், குர்ஆனையும் நபிமொழியையும் முஜ்தஹித் முத்லக் (மார்க்க சட்டங்களில் காரணங்களை ஆய்ந்து சட்டதிட்டங்களை விளக்குபவர்) தான் அறியமுடியும் என்பதாகவும் ஷைத்தான் ஏற்படுத்தி வைத்துள்ள ஐயப் பாட்டை நீக்குவது.

இதுவே மிக முக்கியமான கடைசி அடிப்படையாகும். குர்ஆன் மற்றும் நபிமொழியின் பொருள்களை நம்மால் விளங்க முடியாது என்றும், பெரும் மார்க்க அறிஞர்கள்தாம் அதை விளங்க முடியும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லப்படுவது என்னவென்றால், குர்ஆனில் உள்ள சில விசயங்கள் சாதாரண மனிதனும் கல்வி கற்கிற மாணவனும் விளங்கிக்கொள்ளும் விதத்தில் தெளிவாக உள்ளன. அவற்றை ஒருவன் விளங்காவிட்டால் நாளை மறுமைநாளில் அவனுக்குப் பாதகமாக அவை வந்து நிற்கும். இன்னும் குர்ஆனில் சில விசயங்கள் மார்க்க அறிஞர்கள் மட்டும் விளங்கிக்கொள்ளும் விதத்தில் உள்ளன. இன்னும் சில விசயங்களை அல்லாஹ் மட்டுமே அறிவான்.

குர்ஆனிலும் நபிமொழியிலும் சில செய்திகள் முஜ்தஹித் முத்தல கால் மட்டுமே விளங்கும்படியாக உள்ளன. ஆயினும் பொதுமக்களும் கல்விகற்கிற மாணவர்களும் இலகுவாக விளங்கிக்கொள்கிற விதத்தில் நிறைய சங்கதிகள் காணப்படுகின்றன. உதாரணமாக:

وَاعْبُدُوا اللَّهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا